**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.ii</u>**
**<u>இராமநாதபுரம்.</u>**

**முன்னிலை :** திரு. A. ஆதியான். B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>Crl. M. P. No.500/2026</u>**

**<u>CNR NO. TNRM 02-00148-2026</u>**

ஸ்ரீடீபன், வயது (25/2026)
த/பெ. தேவன்
240/ஏ, பணத்தமேட்டு கண்டிகை,
ஈகுவார்பாளையம் அஞ்சல்,
திருவள்ளூர் மாவட்டம் . . . மனுதாரர்/ வாகனத்தின் உரிமையாளர்

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
கேணிக்கரை காவல் நிலையம்,
குற்ற எண். 220/2026
பிரிவு. 125, 292, 184 BNS . . . எதிர்மனுதாரர்/ குற்றமுறையீடுவோர்

மேலாளர்
Modern Cars பைனான்ஸ் லிட்
12, பார்வதி அம்மன் நகர்,
200 அடி உள் ரிங் ரோடு
குளத்தூர், சென்னை . . . எதிர்மனுதாரர்கள்

---

கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 220/2026 பிரிவு 125, 292, 184 BNS TN 45 CD 2888 பதிவு எண் கொண்ட TOYOTA RUMION என்ற நான்கு சக்கர வாகனம்

Engine No: K15CN7227240, Chasis No: MA3DND725PH668260

---

இம்மனுவானது 20.05.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ரமேஷ்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

<u>உத்தரவு</u>

1. இம்மனுவானது பிரிவு 497 r/w 503 of BNSS ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள TN 45 CD 2888 பதிவு எண் கொண்ட TOYOTA RUMION என்ற நான்கு சக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் காவல்நிலையம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் பின்னர் அந்த வாகனத்தை மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கவும் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வாகனமானது சென்னை குளத்தூர் Modern Cars பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் பெற்று வாங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி.புக் Modern Cars பைனான்சில் இருந்து வருகிறது என்றும் மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

2. அரசு தரப்பில் போதுமான கால அவகாசம் அளித்தும் அரசுத் தரப்பில் எத்தகையை பதிலறிவுப்பும், குறிப்பாணையும் தாக்கல் செய்யப்படவில்லை. மற்றொரு எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி பதிலறிவிப்பு கோரப்பட்டது. அந்த பதிலறிவிப்பில் மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைப்பதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள TN 45 CD 2888 பதிவு எண் கொண்ட TOYOTA RUMION என்ற நான்கு சக்கர வாகனம் போலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்பது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில் மனு சொத்தானது திருமதி. பத்மாவதி, க/பெ. மணிவேல் என்பவர் பெயரில் பதிவாகியுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி பத்மாவதி என்பவர் மனுச் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை என நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். அதே போன்று 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குச்சொத்தான வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வாகனமானது மனுதாரரின் வாழ்வாதாரத்திற்கு முக்கியமாக உள்ளதால் தகுந்த நிபந்தனையுடன் மனுதாரரிடம் வாகனத்தை

இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பது சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே Sunderbhai Ambalal Desai vs. State of Gujarat, 2002 10 SCC 283 என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை கருத்தில்கொண்டும், மேற்கூரிய காரணங்களை கருத்தில் கொண்டும், இந்த நீதிமன்றம் இந்த மனுவை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கிறது.

i) எதிர்மனுதாரர் காவல்நிலையம் மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனத்தை இந்த நீதிமன்றத்தில் உடனடியாக உரிய படிவத்தின் மூலம் ஒப்படைக்க வேண்டும்.

ii) வாகனம் ஒப்படைக்கப்பட்ட பின்பு மனுதாரர் ரூ.7,00,000/-க்கு இரண்டு ஜாமீன்தாரர்களுடன் பிணை பத்திரம் எழுதி தரவேண்டும்.

iii) மனுதாரர் தனது ஆதார் அட்டை நகலினையும், குடும்ப அட்டை நகலினையும் தாக்கல் செய்ய வேண்டும், உடன் மனுதாரரின் தற்போதைய பாஸ்போர்ட் அளவு புகைப்படமும் தாக்கல் செய்யப்பட் வேண்டும்.

iv) மனுதாரரிடம் வழக்கு சொத்துக்கள் ஒப்படைக்கப்படும் முன்பு அவற்றின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவற்றில் மனுதாரர், இந்த நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் ஆகியோர்கள் சான்றொப்பமிட வேண்டும்.

v) மனுதாரர் நீதிமன்றம் வேண்டும்போது, இந்த மனுவினால் கொடுக்கப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும் மனுதாரர் இம்மனுவின் மூலம் பெறும் சொத்துக்களை மாற்றி அமைக்காமலும், சேதப்படுத்தாமலும், விற்பனை செய்யாமலும் இருக்க வேண்டும்.

vi) இந்த நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் பிரிவு 257(1) குற்றவியல் நடைமுறை விதிகளின்படி பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும்.

vii) இந்த மனுவின் மூலம் பெறப்படும் வாகனம் குறித்து போலீசார் தரப்பு அரசுக்கு ஆதாயம் செய்யும் நடவடிக்கை எதுவும் எடுத்தால் மனுதாரர் வாகனத்தை போலீசாரிடம் ஒப்படைக்க வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் நாள் செவ்வாய்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.07.21 19:58:18 +0530

நீதித்துறை நடுவர் எண். II,
இராமநாதபுரம்.